DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 82/2015 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 10 |
| Name | சோமசுந்தரம் |
| Father / Husband Name | திருஞானசம்பந்தம் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 12th April 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் தேனி மாவட்டம், சின்னமனூரில் குடியிருந்து வருகின்றேன். நான் ஆட்டோ ஸ்பேர் பார்ட்ஸ் கடை வைத்து நடத்தி வருகின்றேன். அ.சா. 8 குமார் என் உடன் பிறந்த அண்ணன். விபத்தில் இறந்த நபர் என் உடன் பிறந்த அண்ணனின் மனைவி. கடந்த 31.08.2014 ம் தேதி காளையார்கோவிலில் நடக்கவிருந்த உறவினரின் திருமணத்தில் கலந்து கொள்ள என் அண்ணி பருவதம், என் அக்கா உறவான இராதா, மச்சான் சோமசுந்தரம், மச்சான் மகன் அருணாச்சலம் ஆகியோர் மதுரையில் இருந்து இண்டிகா காரில் பாஸ்ட் டிராக் வாடகைக்கு எடுத்து காளையார்கோவிலுக்கு சென்றார்கள்.

2) திருமணத்திற்கு சென்று விட்டு மீண்டும் திரும்பி வரும் போது நான் மதியம் சுமார் 01.15 மணியளவில் என் மச்சான் சோமசுந்தரத்திற்கு போன் செய்து எங்கு வந்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டேன் மதுரை நோக்கி வந்துகொண்டிருப்பதாக சொன்னார். நான் மதுரையில் தான் என் மச்சான் வீட்டில் அப்போது இருந்தேன். அதன் பிறகு சிவகங்கை நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்று சொல்லி ஒருவர் என் மச்சானின் போனுக்கு நான் தொடர்பு கொண்ட போது எடுத்து பேசினார். அப்போது மணி 01.40 மணியிருக்கும்.

3) அப்போது என்னை யார் என்று அந்த தொலைபேசியில் பேசிய போலிசார் கேட்டதற்கு நான் சொன்னேன். அப்போது மானாகுடி விளக்கு ரோட்டில் மதியம் 01.30 மணியைப் போல் என் அண்ணி மற்றும் உறவினர்கள் சென்ற வண்டியின் எதிர் திசையில் வந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு வரும்படி சொன்னார்.

3) நான் தகவல் கேள்விப்பட்ட உடனே புறப்பட்டு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது என் அண்ணி இறந்துவிட்டதாக மார்சுரியில் இருப்பதாக சொன்னார்கள். என் அண்ணியுடன் சென்ற மற்ற உறவினர்கள் மூவருக்கும் ஏற்பட்ட காயத்திற்கு மேல் சிகிச்சைக்காக சிவகங்கை மருத்துவமனையில் இருந்து மதுரைக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். என் அண்ணியின் இறப்பிற்கு எதிர் திசையில் வந்த மேக்ஸி கேப் வாகனம் தான் காரணம் என கேள்விப்பட்டேன். மறுநாள் 01.09.2014 ம் தேதி காலை என் அண்ணியின் பிரேதத்தை விசாரணைக்கு பின்பு எங்கள் வசம் ஒப்படைத்தனர். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) எனக்கு தகவல் கிடைத்த பிறகு நான் சிவகங்கை வரும் போது மணி எத்தனை என்றால் மதியம் சுமார் 03.00 - 03.30 மணியிருக்கும். நான் தான் என் அண்ணனுக்கு தகவல் சொன்னேனா என்றால் இல்லை அதற்கு முன்பாகவே காவல் நிலையத்தில் இருந்து தகவல் சொல்லிவிட்டார்கள். என் அண்ணன் வரும் போது மணி எத்தனை என்றால் மாலை 05.30 மணியிருக்கும். நான் வந்த பிறகு சம்பவ இடத்தை பார்த்தேனா என்றால் வரும் போது பார்த்தேன்.

2) நான் பார்த்த போது இண்டிகா கார் எந்த திசையில் கிடந்தது என்றால் ரோட்டை விட்டு தாண்டி கிடந்தது திசை ஞாபகமில்லை. மேக்சி கேப் வாகனம் எந்த திசையில் நின்றது என்றால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் ரோட்டின் மேல் நின்றது. எந்த பக்கம் நின்றது என்றால் பதற்றத்தில் பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக புகார் என் அண்ணன் கொடுத்தாரா என்றால் ஞாபகமில்லை. யார் புகார் கொடுத்தார் என்றால் தெரியவில்லை.

3) இறந்து போனவர் என் அண்ணி என்பதால் நான் இவ்வழக்கு சம்பவம் பற்றி கேள்விப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. மேக்சி கேப் வாகனம் மோதியதாக போலிசார் என்னிடம் சொன்னார்கள் என்றால் ஆமாம்.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 12.04.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**